**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. No. 17/2023**

**Date : 16.04.2026**

**வா.சா. 2 - ஜெயசந்திரன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் Power Tools கடை வைத்து வருகிறேன். எங்கு வைத்துள்ளேன் என்றால் கன்னியாகுமரியில். எத்தனை ஆண்டுகள் கடை வைத்துள்ளேன் என்றால் 2011 முதல். கடை எண் என்ன என்றால் தெரியாது. உரிமையாளர் பெயர் பால்ராஜ். வாடகை ஒப்பந்தம் மேற்படி கடைக்கு உள்ளதா என்றால் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். மேற்படி கடைக்கு ஜி.எஸ்.டி வரி உண்டா என்றால் உண்டு. மேற்படி ஜி. எஸ்.,டி வரி எண் என்ன என்றால் ஞாபகம் இல்லை. உத்தேசமாக ஒரு ஆண்டில் வியாபாரம் இலாபம் என்ன என்றால் சரியாக தெரியவில்லை. வரி செலுத்தி வருகிறேனா என்றால் செலுத்து வருகிறேன். மேற்படி ஜி.எஸ்.டி வரி செலுத்தியதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம்.

கடையில் வேலையாட்கள் எத்தனை பேர் என்றால் 1 நபர். எனது கடைக்கு வேறு கிளைகள் உள்ளதா என்றால் கோணத்தில் உள்ளது. எனது கடைக்கு வாங்கும் பொருளுக்கு அச்சடிக்கப்பட்ட பில் உள்ளது என்றால் சரிதான். கோணத்தில் இருக்கும் கடைக்கு வாடகை ஒப்பந்தம் உள்ளதா என்றால் உள்ளது. மாத வாடகை எவ்வளவு என்றால் ரூ.3000/- கன்னியாகுமரியில் உள்ள கடைக்கு மாத வாடகை எவ்வளவு என்றால் இந்த மாதம் வரை ரூ. 6,500/- அடுத்த மாதம் முதல் ரூ. 500/- கூடுதலாக ரூ.7,000/-. நான் கடையில்

முழு நேரமும் இருக்க மாட்டேன் என்றால் சரிதான். எதற்காக இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது. வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் என்ன என்றால் தெரியாது.

வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து குளத்தங்கரையின் பக்கம் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்குமூலம் நான் சொல்லி தயார் செய்யப்பட்டதா என்றால் ஆம். இவ்வழக்கு சம்மந்தமான விவரங்கள் எனக்கு கூறியது யார் என்றால் எனக்கு நேரடியாக தெரியும். 6, 7 வருடங்களாக வாதியை மட்டும் தெரியும். ராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வழக்கு பட்டிகை சொத்து எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் ½ கி.மீ. பூவன் குடியிருப்பு ஊரிலிருந்து ராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் ¼ கி.மீ. வழக்கு பட்டிகை சொத்திற்கு கடைசியாக எப்போது சென்றேன் என்றால் தினந்தோறும் 10 முறை செல்வேன்.

வழக்கு பட்டிகை சொத்து இருக்கும் வி்ஸ்திரணம் என்ன என்றால் 3 ½ சென்ட். வழக்கு பட்டிகை சொத்தின் மேற்கு பக்கம் யாருடைய சொத்து என்றால் வாதியின் மனைவி சொத்து. மேற்படி மனைவி சொத்தினி விஸ்திரணம் என்ன என்றால் சுமார் 3 ½ சென்ட். மேற்படி மேற்கு மற்றும் கிழக்கு பக்கமுள்ள சொத்துக்கள் தனித்தனி கண்டங்களாக உள்ளது என்றால் சரிதான். நடுவில் வேலி உள்ளது. மேற்படி வேலி என்ன வேலி என்றால் சாதாரண மண் வேலி. மேற்கு பக்கமுள்ள மனைவியின் சொத்தை வாதி எப்போது வாங்கினார் என்றால் சுமார் 10, 11 வருடங்கள் இருக்கும்.

மேற்கு பக்கமுள்ள 3 ½ சென்ட்டில் என்ன மரம் உள்ளது என்றால் காய்க்கக்கூடிய

காய் பலன் இல்லாத தென்னை மரங்கள் உள்ளது. மேற்படி காய் பலன் ,இல்லாத மரங்கள் தென்னை கன்று கள் என்றால் சரிதான் மேற்கு பக்கமுள்ள 3 ½ சென்டில் வாழை மரங்கள் உள்ளது என்றால் சரிதான். கிழக்கு பக்கம் உள்ள 3 ½ சென்டில் தென்னை மரங்கள் உள்ளது ஆனால் தென்னை கன்றுகள் இல்லை வாழை மரமும் ,இல்லை என்றால் சரிதான். கிழக்குபக்கமுள்ள 3 ½ சென்டுக்கும் மேற்கு பக்கமுள்ள 3 ½ சென்டுக்கும் வருவதற்கு தனித்தனி கேட்டுகள் உள்ளது என்றால் சரிதான்.. கிழக்கு பக்கம் உள்ள 3 ½ சென்டில் வாதி தென்னை கன்றுகள் நட்டாரா என்றால் நான் பார்க்கவில்லை அது குறித்து எனக்கு தெரியாது. கிழக்குபக்கமுள்ள 3 ½ சென்டுக்கும் கிழக்கு பக்கமுள்ள சொத்து யாருடையது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. கிழக்கு பக்கமுள்ள 3 ½ சென்டில் வாதி தேங்காய் வெட்டியதை நான் பார்த்ததாக குறிப்பிட்டுள்ளேன்எந்த தேதியில் என்றால் தேதி தெரியாது சுமார் 3 வருடம் இருக்கும்.

வாதியினுடைய கிரைய பத்திரத்தில் நான் சாட்சி கிடையாது என்றால் சரிதான். நான் வியாபாரம் செய்து வருவதாக கூறுவருவது பொய் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தில் மேற்கு பக்கமுள்ள 3 ½ சென்டில் 4 பக்கமும் முள் கம்பி வேலி உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தில் கிழக்கு பக்கமுள்ள 3 ½ சென்டில் வடக்கு கிழக்கு மற்றும் தெற்கு பக்கமும் பிரதிவாதி போட்ட முள் கம்பி வேலி உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து எங்கு உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான்

வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஈத்தாமொழி முதல் நாகர்கோவில் மெயின் ரோட்டிலிரு'ந்து மேற்கு பக்கமாக பூவன் குடியிரு'ப்பு பிரிகிறது என்றால் சரிதான். மேற்படி பூவன் குடியிருப்பு ரோட்டிலிருந்து மேற்கு பக்கமாக எத்தனையாவது சொத்தாக வாதியின் சொத்து உள்ளது என்றால் 5 மனைகள் பின்பு ஒரு கடை பின்பு என 8 வது பிளாட்டாக உள்ளது. வழக்கு பட்டிகை சொத்தின் அருகே எனக்கு வீடோ மனையோ கிடையாது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தின் அருகே வீடே கிடையாது என்றால் சரிதான். பூவன் குடியிருப்பு திருப்பத்தில் கடைகள் மற்றும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். வாதி நீதிமன்றத்திற்கு என்று சாட்சியம் அளிக்க வந்தார் என்றால் சுமார் 10 நாட்கள் இருக்கும். வாதியின் அலுவலகம் சென்றேனா என்றால் இல்லை. வாதியின் வழக்கறிஞரை தெரியுமா என்றால் தெரியாது.

வாதியின் வழக்கறிஞறின் முன் நான் கையொப்பமிடவில்லை என்றால் சரிதான். வாதியை எத்தனை வருடமாக தெரியும் என்றால் சுமார் 10 வருடம். வாதி எனக்கு நெருங்கிய நண்பரா என்றால் இல்லை. பழக்கம் மட்டும் தான். மேற்படி பழக்கத்தின் அடிப்படையில் வாதிக்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல் வியாபாரம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**</u>